# இது உங்கள் பிள்ளையின் தடுப்பூசி குறித்த முக்கிய சுகாதார செய்தி ஒன்றாகும்

சட்டப்பிரகாரமாக, ஒன்டாரியோ தடுப்பூசி அட்டவணைக்கேற்ப உங்கள் பிள்ளை தடுப்பூசி பெற்றதற்கான அத்தாட்சி பீல் பொது சுகாதார அலுவலகத்திடம் இருக்க வேண்டும். உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் பதிவுகள் பீல் பொது சுகாதாரத்திடம் இல்லாவிடில் அல்லது அவரின் தடுப்பூசிகள் ஒன்டாரியோவின் கோட்பாட்டிற்கு ஏற்ப இல்லையென பிள்ளையின் பதிவுகள் காட்டுமாயின்.

உங்கள் பிள்ளையின் தடுப்பூசித் தகவல்களை உங்கள் குடும்ப வைத்தியர் பீல் பொது சுகாதாரத்திற்கு அறிவிக்காவிடில் பெற்றார் (அல்லது பாதுகாவலர்) என்ற முறைபில் உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் பதிவுகளை நீங்கள் எமக்கு வழங்க வேண்டும்.

## எடுக்க வேண்டிய தடுப்பூசிகள்

18 வயதிற்கு குறைவான பிள்ளைகள் யாவரும் பின்வரும் குழந்தை தடுப்பூசிகள் மற்றும் பிரசித்த உயர்வை (Booster Shot) கொடுக்கும் ஊசியை பெற்றிருக்க வேண்டும்:

- தொண்டை கரப்பன் நோய் - (diphtheria)
- இளம் பிள்ளை வாதம் - (polio)
- ஏற்பு நோய் - tetanus (also known as lockjaw)
- அம்மை நோய் - (measles)
- கூகை கட்டு நோய் - (mumps)
- ஜேர்மன் அம்மை நோய் - rubella (also known as German measles)

பிள்ளைகள் வயதான நேரத்தில் அவ்வயதிற்கேற்ற சரியான தடுப்பூசிகளை எடுக்க வேண்டும்

## உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் பதிவுகளை வழங்குதல்

உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகள் வயதிற்கும் தற்போதைய நிலைக்கும் ஏற்ப இருப்பின் பீல் பொது சுகாதார அலுவலகத்திற்கு பின்வரும் ஒரு வழியில் தயவாக கிடைக்கச் செய்யவும்.

- **எங்களுடன் 905-799-7700ல் தொடர்பு கொள்ளவும்.** மொழி பெயர்ப்பாளர் உங்களுக்கு தேவையாயின் ஒருவரை நாங்கள் ஒழுங்கு செய்வோம். நீங்கள் கலிடன் (Caledon) வாசியாயின் 905-584-2216ல் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

- **www.immunizepeel.ca எனும் இணையத்தளத்தின் மூலமாக**

- **பின்வரும் விலாசத்திற்கு அஞ்சலில் அனுப்பவும் அல்லது நேரடியாக எடுத்து வரவும்:**

  Immunization Records
  Peel Public Health
  7120 Hurontario Street
  P.O. Box 630
  Mississauga, ON L5M 2C5

அஞ்சலில் நீங்கள் அனுப்புவீர்களாயின் பிரதி ஒன்றை மட்டும் அனுப்பவும். மூலப்பிரதியை அனுப்பாது பார்த்துக் கொள்ளவும். பதிவுகளை நேரடியாக எடுத்து வருவீர்களாயின் மூலப்பிரதியை கொண்டு வரவும். எங்கள் காகிதக் கோவையில் வைப்பதற்காக பிரதி ஒன்றை நாங்கள் எடுப்போம்.

## உங்கள் பிள்ளைக்கு தடுப்பூசிகளை அவ்வப்போது கொடுத்தல்

உங்கள் பிள்ளை தடுப்பூசி ஒன்றை பெற வேண்டியிருப்பின்:

1) தடுப்பூசி போடுவதற்கு நேர்முக சந்திப்பொன்றை உங்கள் குடும்ப வைத்தியருடன் ஒழுங்கு செய்யவும். அல்லது உங்கள் மருத்துவமனைக்கு செல்லவும்.
2) உங்கள் பிள்ளைக்கு தடுப்பூசி கொடுக்கப்பட்டவுடன், **விபரங்களை உடனடியாக பீல் பொது ஆரோக்கிய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

## பாடசாலை செல்ல அனுமதி கொடுத்தல்

தற்போதைய தடுப்பூசி பதிவுகள் இல்லாத மாணவர் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்கப்படாமல் இருக்கக் கூடும். இவ்வாறு நடைபெறாமல் இருக்க பிள்ளையின் பதிவுகளை காலத்திற்கு ஏற்றவாறு மாற்ற பீல் பொது சுகாதாரம் உதவும்.

## கனடாவிற்கு வெளியே எடுத்த தடுப்பூசிகள்

மாணவனின் தடுப்பூசி பதிவுகளை பீல் பொது சுகாதாரம் இலவசமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும். உங்கள் பிள்ளையின் பதிவை மொழி பெயர்க்க ஒழுங்கு செய்ய எங்களுடன் 905-799-7700ல் தொடர்பு கொள்ளவும். நீங்கள் கலிடன் வாசியாயிருப்பின் 905-584-2216ல் தொடர்பு கொள்ளவும்.

## ஒன்டாரியோ சுகாதார காப்புறுதித் திட்ட அடையாள அட்டை இல்லையா?

உங்கள் பிள்ளைக்கு ஒன்டாரியோ சுகாதார காப்புறுதித் திட்ட அடையாள அட்டை (OHIP) இல்லாதிருந்தால் அவருக்கு இலவசமாக தடுப்பூசி கொடுப்போம்.

நேர்முக சந்திப்பொன்றை ஒழுங்கு செய்ய பீல் சுகாதாரத்தை 905-799-7700ல் தொடர்பு கொள்ளவும். நீங்கள் கலிடன் வாசியாயின் 905-584-2216ல் தொடர்பு கொள்ளவும்.

## தடுப்பூசிகள் உங்கள் பிள்ளையை நோயினின்று பாதுகாக்கும்

- பாரதுாரமான தொற்று நோயினின்று தடுப்பூசி உங்கள் பிள்ளைகளை பாதுகாக்கும்.
- உங்கள் பிள்ளைக்கு அவருடைய வாழ்நாள் முழுவதும் தடுப்பூசி கொடுக்கவும்.
- உங்கள் பிள்ளை தடுப்பூசி பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு தடவையும் உங்கள் பிள்ளையின் தடுப்பூசிக் பதிவுகளை பீல் பொது சுகாதார அலுவலகத்திற்கு அனுப்பவும்.

கேள்விகள் ஏதாவது உங்களுக்கு இருப்பின் தயவாக 905-799-7700ல் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். நீங்கள் கலிடன் வாசியாயின் 905-584-2216ல் தொடர்பு கொள்ளவும். தேவையிருப்பின் நாங்கள் மொழி பெயர்ப்பாளரை ஒழுங்கு செய்வோம். நீங்கள் பேசும் மொழியை முகவருக்கு கூறவும். அவர் உங்கள் மொழி பேசும் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை உங்களுடன் பேசுவதற்கு ஒழுங்கு செய்வார்.

நன்றி,

தடுப்பூசி பதிவுகள் குழு (Immunization Records Team)
பீல் பொது சுகாதாரம் (Peel Public Health)

Region of Peel
*Working for you*
Public Health